## டிசம்பர் –02 – திருவருகைக்காலமுதல் ஞாயிறு

### “எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்” (லூக் 21:36)

-----------------------------------------------------------------

**முதல் வாசகம் : எரேமியா 33 : 14 – 16**

இதோ, நாள்கள் வருகின்றன, என்கிறார் ஆண்டவர். அப்பொழுது இஸ்ரயேல் வீட்டாருக்கும் யூதா வீட்டாருக்கும் நான் கொடுத்துள்ள வாக்குறுதியை நிறைவேற்றுவேன். அந்நாள்களில் - அக்காலத்தில் - நான் தாவீதிலிருந்து நீதியின் தளிர் ஒன்று முளைக்கச் செய்வேன். அவர் நாட்டில் நீதியையும் நேர்மையையும் நிலைநாட்டுவார். அந்நாள்களில் யூதா விடுதலை பெறும் எருசலேம் பாதுகாப்புடன் வாழும். ”யாவே சித்கேனூ” என்னும் பெயரால் இந்நகர் அழைக்கப்படும்.

**பதில்பாடல் :** ஆண்டவரே! உம்மை நோக்கி என் உள்ளத்தை உயர்த்துகிறேன்.

**இரண்டாம் வாசகம் : 1 தெசலோனிக்கேயர் 3:12– 4: 2**

சகோதர, சகோதரிகளே! உங்கள் மீது நாங்கள் கொண்ட அன்பு வளர்ந்து பெருகுவதுபோல, நீங்கள் ஒருவர் ஒருவருக்காகவும் எல்லாருக்காகவும் கொண்டுள்ள அன்பையும் ஆண்டவர் வளர்த்துப் பெருகச் செய்வாராக! இவ்வாறு நம் ஆண்டவர் இயேசு தம்முடைய தூயோர் அனைவரோடும் வரும்பொழுது, நம் தந்தையாம் கடவுள்முன் நீங்கள் குற்றமின்றித் தூய்மையாக இருக்குமாறு அவர் உங்கள் உள்ளங்களை உறுதிப்படுத்துவாராக!
சகோதர சகோதரிகளே! நீங்கள் கடவுளுக்கு உகந்தவர்களாய் வாழும் முறையை எங்களிடம் கற்றுக் கொண்டீர்கள் அப்படியே வாழ்ந்தும் வருகிறீர்கள். இதில் இன்னும் முன்னேற வேண்டுமென ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் உங்களிடம் இறுதியாகக் கேட்டுக் கொள்கிறோம். ஆண்டவராகிய இயேசுவின் பெயரால் நாங்கள் உங்களுக்குக் கொடுத்த கட்டளைகளை நீங்கள் அறிவீர்கள்.

**நற்செய்தி : லூக்கா 21 : 25 – 28, 34 - 36**

அக்காலத்தில் மானிடமகன் வருகையைப்பற்றி இயேசு தம் சீடர்களுக்குக் கூறியது : மேலும் கதிரவனிலும் நிலாவிலும் விண்மீன்களிலும் அடையாளங்கள் தென்படும். மண்ணுலகில் மக்களினங்கள் கடலின் கொந்தளிப்பின் முழக்கத்தினால் கலங்கி என்ன செய்வதென்று தெரியாது குழப்பம் அடைவார்கள். உலகிற்கு என்ன நேருமோ என எண்ணி மனிதர் அச்சத்தினால் மயக்கமுறுவர். ஏனெனில்இ வான்வெளிக் கோள்கள் அதிரும். அப்போது மிகுந்த வல்லமையோடும். மாட்சியோடும் மானிடமகன் மேகங்கள் மீது வருவதை அவர்கள் காண்பார்கள். இவை நிகழத் தொடங்கும்போது நீங்கள் தலைநிமிர்ந்து நில்லுங்கள் ஏனெனில் உங்கள் மீட்பு நெருங்கி வருகின்றது. ”மேலும் இயேசு, ”உங்கள் உள்ளங்கள் குடிவெறி, களியாட்டத்தாலும் இவ்வுலக வாழ்க்கைக்குரிய கவலையினாலும் மந்தம் அடையாதவாறும் அந்நாள் திடீரென வந்து ஒரு கண்ணியைப்போல் உங்களைச் சிக்க வைக்காதவாறும் எச்சரிக்கையாய் இருங்கள். மண்ணுலகு எங்கும் குடியிருக்கும் எல்லார்மீதும் அந்நாள் வந்தே தீரும். ஆகையால் நிகழப்போகும் அனைத்திலிருந்தும் தப்புவதற்கும் மானிடமகன் முன்னிலையில் நிற்க வல்லவராவதற்கும் எப்பொழுதும் விழிப்பாயிருந்து மன்றாடுங்கள்” என்றார்.

**தியானம்:** இன்று நாம் திருவருகைக் காலத்தில் காலடி எடுத்து வைக்கின்றோம். ஒவ்வொரு வருடமும் வந்து போகும் காலமாக இது இருக்கப் போகின்றதா? அல்லது மாற்றம் எம்மில் நிகழப் போகின்றதா? பிறப்பும் இறப்பும் நிரந்தரமானது. யார் எப்போது பிறப்பார் என்றோ எப்போது இறப்பார் என்றோ எம்மால் சொல்ல முடியாது. சில மருத்துவ சாதன உதவியுடன் பிறப்பின் நாளை, மாதத்தை கணித்தாலும் அது சரியாக அமைவது குறைவு. ஆனால் இறப்பைப் பற்றி தெரியவே தெரியாது. காலமும் நேரமும் இறைவனின் கைகளில்தான் உள்ளது. இவ்வுலக வாழ்வு நமக்கு கொடையாக தரப்பட்டுள்ளது. அதனை நாம் சரியாகப் பயன்படுத்த வேண்டும். யேசுவிற்கு வெறும் 33 ஆண்டுகள்தான் இருந்தது. அதற்குள் தாம் செய்ய வேண்டிய எல்லவற்றையும் அவர் நிறைவேற்றினார். எமக்கும் பல கடமைகள் உண்டு. அவற்றை நாம் சரிவர நிறைவேற்ற வேண்டும். மரணம் எமக்கு மட்டும் முடிவாக உள்ளது. அந்த வேளையில் நாம் தயாராக இருக்க வேண்டும் என்ற கருத்தை இன்றைய நற்செய்தி எமக்கு வெளிப்படுத்துகின்றது. முடிந்து போகின்ற ஒவ்வொரு வினாடியும், நிமிடமும் எமக்கு சொந்தம் அல்ல. ஆனால் நாம் வாழும் வாழ்வு எமக்கு சொந்த மானது. அதனை வடிவமைப்பது எமது கைகளில்தான் உள்ளது. எவ்வாறு யேசு தந்தையின் திட்டத்தை நிறைவேற்ற இவ்வுலகிற்கு வந்தாரோ அவ்வாறு எம்மிடமும் இறைவன் ஒரு திட்டத்தை தந்திருக்கின்றார். அதனை புரிந்துகொண்டு வாழ இத்திருவருகைக்காலம் எம்மை அழைக்கின்றது.